தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பங்குனி 4, திருவள்ளுவர் ஆண்டு-2053

2022 மார்ச் 18, வெள்ளிக்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. மு. அப்பாவு** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

“வாரி பெருக்கி வளம்படுத் துற்றவை
ஆராய்வான் செய்க வினை.”

வருமானம் வரக்கூடிய வழிகளை விரிவாக்கி, வளங்களையும் பெருக்கி, இடையூறுகளையும் ஆராய்ந்து நீக்கிட வல்லவனே செயலாற்றும் திறனுடையவன்.

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

1. அறிவிப்பு

மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் முன் வரிசையில் நின்று வரவு–செலவுத் திட்டம் அளிக்க வசதி செய்யப்பட்டுள்ளது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் முன் வரிசையில் நின்று படிப்பதற்கு ஏற்ற வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் முன் வரிசையில் நின்று நிதிநிலை அறிக்கையை அளிக்கலாம். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)*